**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

**<u>IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI</u>**

Calendar :
Miscellaneous :
Preliminary register :
Sessions :

Sessions Case No. 58 of 2020

Deposition of witness for :
:

Prosecution : PW- 15
Defence :
Court :

Name : Nadarajan

Father's Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of March 2023.**

முதல் விசாரணை **: எதிரிகள் ஆஜர் இருவர் வழக்கறிஞர்கள் ஆஜர்**

நான் தற்போது பாரூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளரராக பணிபுரிந்து வருகிறேன். 15.12.2018 தேதியில் 23.30 மணிக்கு ஊத்தங்கரை காவல் நிலையத்தில் இரவு ரோந்து அலுவலில் இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலின் பெயரில் முருகன் த/பெ பெருமாள் ஆனந்தன் த/பெ அண்ணாமலை ஆகியோர்களை ஊத்தங்கரை அரசு மருத்துமனைக்கு சென்று பார்த்தபோது முருகன் ஆனந்தன் இருவரும் மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு உள்ளதால் தருமபுரி மருத்துவமனைக்கு சென்று பொது வாடில் முருகன் என்பவரை 16.12.2018 அன்று இரவு 1 மணிக்கு விசாரணை செய்து புகார் வாக்கு மூலம் பெற்று ஊத்தங்கரை காவல் நிலையம் வந்து அதிகாலை 3 மணிக்கு ஊத்தங்கரை காவல் நிலைய குற்ற எண்.589/2018 இ.தா.ச சட்ட பிரிவு 394 உன் இனைந்த 397 மற்றும் இந்தியன் ஆர்ம்ஸ் ஆக்ட் பிரிவு 25(1)(எ)-ன் கீழ் வழக்கினை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையினை ஊத்தங்கரை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனுப்பியும் இதர நகல்களை காவல் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கை அ.தா.ஆ.9 ஆய்வாளர் என்னை விசாரரித்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்வதினத்தின் போது நிலைய பணியில் இருந்தேனா ரோந்து பணியில் இருந்தேனா என்றால் ஊத்தங்கரை காவல் நிலைய இரவு ரோந்து அலுவளராக இருந்தேன். பொதுவாக ஒரு காவல் நிலையத்திற்கு ரோந்து அலுவளர் ஒருவர் மட்டுமே நியம்மிக்கப்படுவார் என்றால் சரிதான் ரோந்து பீட்கள் காவலர்கள் இருப்பார்கள். பொதுவாக இரவு பணி மற்றும் ரோந்து பணியில் உள்ளவர்கள் எந்த எந்த பகுதிகளுக்கு சென்றால் என்பதை ஆவணமாக பராமரிப்போம் என்றால் சரிதான். இரவு 23.30 மணி அளவில் மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்தவுடன் மருத்துவமனை சென்று விட்டேன் 10 நிமிடத்தில் சென்று இருப்ப என்றால் போய் இருப்பேன். ஊத்தங்கரை அரசு மருத்துமனையில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்யபடவில்லை என்றால் சரிதான் தருமபுரியில் போய் விட்டார்கள். தருமபுரிக்கு சென்று புகார் வாக்கு மூலத்தை நான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தினை 1/2 மணி நேரத்தில் பதிவு செய்து விட்டு இருப்பேன். முருகன் கொடுத்த புகார் வாக்கு மூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் வரை யாரும் செல்ல வில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. புகார் வாக்கு மூலம் பதிவு செய்யப்படும்போது அ.சா.1 முருகன் சுய நினைவுடன்தான் இருந்தார். அ.சா.1 தீவிர சிகிச்சை நிலையில் இருப்பதால் மேல் சிகிச்கைக்காக தருமபுரி மருத்துமனைக்கு கொண்டு சென்று இருப்பது என்றால்

எனக்கு தெரியாது. அ.சா.1 2 தவிற இருந்த மற்ற நபர்கள் பற்றி தெரியாது. அ.சா.1 எந்த வித தகவலைம் கொடுக்க வில்லை என்றாலும் புகார் வாக்கு மூலத்தை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

Sub

SENTHIL KUMAR RAJAVEL

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL

Location: Uth